# ஒரு கூடை கதைகள்

வெள்ளி முதல் ஞாயிறு வரை மாலை06.00 - 06.30)

நமது தாத்தா பாட்டி நமக்கு கதை சொல்லி வளர்த்தது போல் இல்லாமல் இப்போது நம் அம்மா அப்பா இருவரும் வேலைக்கு போய் வேகமாய் சுழலும் சூழலில் நமக்கு யார் கதை சொல்வார்கள் என ஏங்கும் குழந்தைகளுக்காகவே உருவாக்கப்பட்டது **"ஒரு கூடை கதைகள்"**.

குழந்தைகள் தன் அறிவுத்திறனை வளர்த்துக்கொள்ளவும், மக்களோடு மக்களாய் பழகவும் உதவும் பாரம்பரியமிக்க கதைகள், கதையின் சாராம்சம் என்னவாக அமைகிறது என்பதையும் நமக்கு கதை சொல்லும் **ஆசிரியர் திருமதி. சுடரொளி** மிகவும் சுவையாகவும், சுவாரஸ்யம் மிக்கதாகவும் கூறுகிறார்.

இக்கதைகளை ஒவ்வொரு பள்ளியாக சென்று குழந்தைகளை அமர வைத்து குழந்தைகளுக்கு தெரிந்த கதையை சொல்லச் சொல்லியும், அந்த கதை எதற்காக சொல்லப்படுகிறது என்பதையும் கூறி குழந்தைகளை சந்தோஷப்படுத்தும் விதமாய் அமைகிறது. இந்நிகழ்ச்சியை **ஆர்.தாரா முரளி இயக்கம்** செய்கிறார்.

பெற்றோர்கள் இந்நிகழ்ச்சியை பெரிதும் வரவேற்பதோடு நாமும் நமது குழந்தைகளுக்கு கதை சொல்லி வளர்க்கவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியிருப்பது மூன்டிவிக்கு மேலும் பெருமை சேர்த்துள்ளது.

# நலம் காப்போம்

(திங்கள் முதல் வெள்ளி வரை பகல் 11.00 - 12.00)

மூன் டிவியில் திங்கள் முதல் வெள்ளி வரை பகல் 11.00 மணிமுதல் 12.00 மணிவரை தினம் ஒரு மருத்துவர் பங்கு பெற்று உடல் நலன் மற்றும் ஆரோக்யமாய் வாழ வழிகாட்டியாக அமையும் நிகழ்ச்சி **"நலம் காப்போம்".**

அலோபதி, சித்தா, ஆயுர்வேதா, யுனானி, அக்குபஞ்சர் என ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் நேரலையாக ஒளிபரப்பாகும் நலம் காப்போம் நிகழ்ச்சி பார்வையாளர்கள் தங்களது சந்தேகங்களை கேட்டறிந்து அனைவரும் பயன் பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

நோய்நாடி நோய் முதல் நாடி என்பதற்கேற்ப நோய் வரும் முன் காப்பது எப்படி? அதற்கான சிகிச்சை முறைகள் என அத்தனையும் விளக்கமாக அறியும் வகையில் அனைவரும் பாரட்டும்படியும் நிகழ்ச்சி அமைந்துள்ளது.

இந்நிகழ்ச்சி மூன் டிவி நேயர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.